பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 02 2026 **WEDNESDAY** 12.40 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. ஒடிஷா சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று காலை பூரி ஸ்ரீ ஜெகன்நாதர் கோவிலில் வழிபட்டார்.

2. அமெரிக்காவுடன் கனிம வளம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெறவுள்ள நிலையில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாஷிங்டனில், அந்நாட்டு அமைச்சர் திரு மார்கோ ரூபியோவை சந்தித்து பேசினார்.

3. நாட்டின் அனைத்து குடும்ப அட்டைகளும் மின்னணு மயமாக்கப்பட்டு விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. இந்தியா — கிர்கிஸ்தான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி இன்று அஸ்ஸாம் மாநிலம் சோனிக்பூரில் தொடங்கியது.

5. கத்தார் ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியின் இறுதியாட்டத்திற்கு இந்தியாவின் பங்கஜ் அத்வானி முன்னேறியுள்ளார்.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>

ஒடிஷா மாநிலத்திற்கு சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று காலை பூரி ஸ்ரீ ஜெகன்நாதர் கோவிலில் வழிபட்டார்.

**Mahuldihi-**ல் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் விழாவில் பங்கேற்கும் திருமதி திரௌபதி முர்மு, பழங்குடியின தலைவர் **Bhanjbir Soren-**னின் திருவுருவச் சிலையையும் இன்று திறந்துவைக்கிறார்.

பள்ளி மாணவர்களுடன் அவர் கலந்துரையாட திட்டமிட்டுள்ளார்.

**Mahuldihi-**ல் நகரில் ஸ்ரீ **Purneshwar** மஹாதேவ் கோவிலுக்கு சென்று வழிபடும் குடியரசுத் தலைவர், அங்கு புதிதாக கட்டப்பட்டுள்ள பயணியர் விடுதியையும் திறந்துவைக்க உள்ளார்.

**Rairangpur** மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, பழங்குடியினர் நலன் உள்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தொடங்கிவைத்த பின், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பொதுக்கூட்டத்தில் உரையாற்ற உள்ளார்.

<<<<<<>>>>>

அமெரிக்காவுடன் கனிமவளம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெறவுள்ள நிலையில், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மார்கோ ரூபியோவை சந்தித்து பேசியுள்ளார்.

வாஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்தபின் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு ஒத்துழைப்பு, மண்டல மற்றும் உலகளாவிய முக்கிய விஷயங்கள் பற்றி பேச்சு நடத்துவது குறித்து திட்டமிடப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடன் வர்த்தகம், எரிசக்தி, அணுசக்தி, முக்கிய கனிமவள தாதுக்கள், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவற்றில், கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கோரிக்கையை ஏற்று, இருதரப்பு விஷயங்களில் முடிவெடுப்பதற்கான கூட்டங்களை விரைவாக நடத்துவதற்கு அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்தியா — அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதற்கு இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

ஜனநாயக ரீதியில் செயல்படும் நாடுகள், இணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர்.

புதிய பொருளாதார வாய்ப்புகளை கொண்டுவருவதற்கும், எரிசக்தி பாதுகாப்பு தொடர்பான இலக்குகளை எட்டுவதற்கும் அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து செயல்படும் என்றும் இரு நாட்டு அமைச்சர்களும் கூட்டாக தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

நாட்டின் **100** சதவீத குடும்ப அட்டைகள் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளதாகவும், இதில் **99** சதவீதம் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் இதை தெரிவித்த நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் பொது விநியோக திட்டத்துறை இணையமைச்சர் திருமதி **Nimuben Bambhaniya,** உணவு பாதுகாப்புக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

பிரதமரின் அன்ன யோஜனா திட்டத்தின்கீழ், **81** கோடி பயனாளிகளுக்கு விலையில்லா உணவு தானியம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த திட்டம் உலகிலேயே மிகப்பெரிய உணவு பாதுகாப்புத் திட்டம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு நாடு — ஒரே குடும்ப அட்டை திட்டத்தின்கீழ், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் நாடு முழுவதும் ரேஷன் பொருட்களை பெற்று வருவதாகவும் திருமதி **Nimuben Bambhaniya** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் செல்வி மம்தா பானர்ஜி தலைமையிலான அரசு, மத்திய அரசின் பல திட்டங்களை நிறைவேற்ற தவறிவிட்டதாக மாநிலங்களவையில் பிஜேபி உறுப்பினர் திரு **Samik Battacharya** குற்றம் சாட்டியுள்ளார்.

கேள்விநேரத்தில் இதை தெரிவித்த அவர், மாநில அரசின் இந்த நடவடிக்கையால் பொதுமக்கள் நலத்திட்ட உதவிகள் கிடைக்கப் பெறாமல் பாதிப்புக்கு உள்ளாவதாக கூறினார்.

மாநிலத்தில் பழங்குடியின மற்றும் சிறுபான்மையின மக்களுக்கு மத்திய அரசின் திட்ட உதவிகள் சென்றடையவில்லை என்றும் திரு **Samik Battacharya** கூறினார்.

<<<<<<>>>>>>

மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை அவை தொடங்கியதும், கேள்விநேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து பல்வேறு பிரச்சினைகள் குறித்து கோஷமிட்டனர்.

அவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் கண்ணியத்தை கடைபிடிக்க வேண்டும் என்றும், அவையை தொடர்ந்து நடத்துவதற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

இதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏற்க மறுத்து தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

இந்தியா — கிர்கிஸ்தான் இடையிலான 13-ஆவது கூட்டு ராணுவப் பயிற்சியான **Khanjar** இன்று அஸ்ஸாம் மாநிலம் சோனித்பூரில் தொடங்குகிறது.

இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் நடைபெறும் இந்த கூட்டு ராணுவப்பயிற்சி இம்மாதம் **17**-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

நகர்ப்புறங்களில் மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கைகள், பயங்கரவாத தடுப்பு முயற்சிகள் உள்ளிட்டவற்றில் ஐ நா விதிமுறைகளுக்கு ஏற்ப இப்பயிற்சி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

இந்தியா — கென்யா இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், மண்டல மற்றும் உலகளாவிய முக்கிய விஷயங்கள் குறித்தும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் நிலையிலான மூன்றாவது சுற்று பேச்சுக்கள் நைரோபியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கிழக்கு மற்றும் தென்னாப்பிரிக்காவுக்கான இந்திய இணைச்செயலர் திரு ஜனேஷ் கேயின், கென்யாவின் வெளியுறவுத்துறை இணை இயக்குனர் ஜானே மகோரி ஆகியோர் இந்த கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

இந்த சந்திப்பு குறித்து நைரோபியில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருதரப்பு ஒத்துழைப்பு, அரசியல்

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கல்வி, கலாச்சாரம், மின்னணு கட்டமைப்பு உள்ளிட்ட விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதையும், ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான அறிவிப்புகளையும் வரவேற்பதாக மதுரை மாவட்டத்தை சேர்ந்த செந்தில்குமார் மற்றும் திருமுருகன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

***<u>(Sound Byte — மக்கள் - 46 Sec.)</u>***

<<<<<<>>>>>

லடாக் பகுதி மக்களின் கோரிக்கைகள் குறித்து அங்குள்ள அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் மத்திய உள்துறை அமைச்சகம் இன்று மீண்டும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள உள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் லடாக்கில் உள்ள அமைப்புகளின் தலைவர்கள் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அளித்த மனுக்களின் அடிப்படையில் இந்த பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லடாக் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஹனீஃபா ஜான், கார்கில் தலைமை செயல் கவுன்சிலர் டாக்டர் முகமது ஜாஃபர் அகூன், முன்னாள் மக்களவை உறுப்பினர் துப்ஸ்டன் உள்ளிட்ட 14 பிரதிநிதிகள் இந்த பேச்சு வார்த்தையில் பங்கேற்கின்றனர்.

<<<<<<>>>>>

அமெரிக்காவின் நடப்பு நிதியாண்டுக்கான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டு சட்டத்திற்கு அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

அமெரிக்கா பல்வேறு நாடுகளுக்கு அளித்துவரும் பத்து பில்லியன் டாலர் உதவியை நிறுத்துவதற்கு இந்த சட்டம் வகை செய்கிறது.

அமெரிக்காவின் நிதியுதவி மற்றும் செலவினங்களை மேற்கொள்வதற்காக புதிய நிதியம் அமைப்பதற்கான மசோதா விரைவில் தாக்கல் செய்யப்படும் என்றும் திரு டோனல்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

யுக்ரைன் மீது ரஷ்யா நேற்றிரவு மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்யா தாக்குதலை நிறுத்தப்போவதாக அந்நாட்டு அரசு அளித்த உறுதிமொழியை மீறிவிட்டதாக யுக்ரைன் அதிபர் திரு விளாடிமீர் ஜெலன்ஸ்கி கூறினார்.

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்பின் தனிப்பட்ட வேண்டுகோளின்பேரில் இந்த போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பு வெளியானதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருநாடுளுக்கும் இடையிலான சமரச பேச்சுக்களுக்கு அமெரிக்காவின் விதிமீறல் தடையாக இருப்பதாகவும் திரு ஜெலன்ஸ்கி கூறினார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கத்தார் ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியின் இறுதியாட்டத்திற்கு இந்தியாவின் பங்கஜ் அத்வானி முன்னேறியுள்ளார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், ஈரானின் **Shahin Sabzi**-ஐ **4-0** என்ற ஆட்டக்கணக்கில் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

-----------------

**ஆசிய குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்திய மகளிர் அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

**சீனாவின் Quindoo-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் 5-0 என்ற ஆட்டக்கணக்கில் மியான்மரை வென்றது.**

**<<<<<<END>>>>>**